# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 117/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சுப்ரமணி | நாள் | 30.06.2023 |
| தகப்பனார் பெயர் | மாணிக்கம் | | |

**1 முதல் 3, 5ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

9) எங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்ட 02.01.2013ம் தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் 14 செண்ட் நிலம் தடவழிக்காக ஒதுக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளோமா என்றால், என் தந்தையின் பெயருக்கு பாகம் பிரிந்த பத்திரத்தில் அவ்வாறு கூறியுள்ளோம்.

10) அவ்வாறு என் தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்து குறித்து என் குடும்ப உறுப்பினர்களுக்குள் பாகம் செய்யப்பட்டுவிட்டதா என்றால், செய்யப்பட்டுவிட்டது. அவ்வாறு என் பெயரில் தனியாக பாகம் பிரிக்கப்பட்ட சொத்து குறித்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், தடத்திற்காக எனக்கு விடப்பட்ட சொத்திற்குரிய பத்திரத்தை மட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

11) நான் சொல்வது தவறானது என்றாலும், இவ்வழக்கில் 3–வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள எனக்கு பாகமாக பிரிந்த சொத்திற்குரிய பத்திரம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தற்போது அவ்வாறு தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

12) என் தந்தைக்கு கடந்த 21.01.2013ம் தேதியில் பாகபிரிவினையின் மூலம் கிடைத்த "B" செட்யூல் சொத்துதான் இவ்வழக்கில் நான் தடவழி கேட்டு என் வழக்குரையில், 1–வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள சொத்து என்றால், சரிதான். என் தந்தையின் பெயரில் உள்ள பாகபிரிவினை பத்திரத்தில் சின்னபொண்ணு நிலத்திற்கு தெற்கு என மட்டுமே செக்குபந்தி கண்டுள்ள நிலையில், வழக்குரை சொத்துவிவரத்திலும், என் பிரமாண பத்திரிக்கையிலும் சின்னபொண்ணு நிலம் மற்றும் தாவா 5–வது அயிட்ட வண்டிப்பாதைக்கு தெற்கு என தவறான செக்குபந்தியை குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

13) இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி அழகேஸ்வரி 06.12.1975ம் தேதியில் ராஜம்மாள் என்பவரிடமிருந்து சொத்தை கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தில் தடவழி ஏதேனும் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து நான் தெரிந்து கொண்டேனா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

14) இவ்வழக்கில் 1முதல் 4வரையிலான வாதிகள் பெயரிலுள்ள கிரயப்பத்திரத்திலும் மற்றும் என் தந்தையின் பெயரிலுள்ள பாகபிரிவினை பத்திரத்திலும் தற்போது தாவாவில் 5–வது அயிட்டச்சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள தடவழி குறித்து எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. (வாதிகள் தரப்பில் 1983ம் வருடத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பேரில் தான் மேற்படி வண்டிப்பாதை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கேள்வி எழாது என ஆட்சேபிக்கப்பட்டு வாதிகள் தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி கேள்வி பதிவு செய்யப்படுகிறது).

15) தற்போது எந்த சர்வே எண்ணில் உள்ள நிலத்திற்கு தடவழி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சர்வே எண் தற்போது நினைவில்லை. என் சொத்திற்குரிய சர்வே எண்ணும் வழக்கிலுள்ள மற்ற வாதிகளின் சொத்திற்குரிய சர்வே எண்களும் என்னால் சொல்ல இயலுமா என்றால், சரியாக நினைவில்லை.

16) ச.எண்.99/3ல் உள்ள 63 செண்ட் நிலமானது 5ம் பிரதிவாதியின் தந்தை சின்ன பொண்ணு என்பவருக்கு D கார்டு பட்டா மூலம் பாத்தியப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி சின்ன பொண்ணு என்பவர் மேற்படி ச.எண்.99/3ல் உள்ள நிலத்தில் தனது சுவாதீனத்திற்கு ஆறுமுகம், பொன்னப்பன், ரத்தினம்மாள், செங்குட்டுவன் ஆகியோர்கள் இடையூறு செய்வதாக கூறி இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.122/1983 என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து அது கடந்த 03.12.1987ம் தேதியில் மேற்படி சின்ன பொண்ணுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால், சரிதான்.

17) மேற்படி தீர்ப்பிற்கு எதிராக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில், AS.No.37/1988 என்ற மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மேல்முறையீட்டு வழக்கில்

அவ்வழக்கின் மேல்முறையீட்டாளர்களுக்கு, மேற்படி தடவழியில் நடந்து செல்வதற்கும் மற்றும் நிலத்தடி நீர் குழாய் பதிப்பதற்கும் மட்டும் உரிமை வழங்கப்பட்டது என்றால், சரிதான்.

18) மேற்படி அ.வ.எண்.122/1983 மற்றும் AS.No.37/1988 என்ற இரு வழக்குகளிலும் நீதிமன்றத்தால் மேற்படி வழக்கு சொத்தில் வண்டிப்பாதை எதுவும் இல்லை என்றும், அவ்வாறு வண்டிப்பாதை இருப்பினும், பட்டாதாரர் சின்னப்பொண்ணுக்குதான் மேற்படி வண்டிப்பாதையை பயன்படுத்தும் உரிமை உள்ளது என்றும், இறுதியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

19) அவ்வாறு மேற்படி அ.வ.எண்.122/1983 மற்றும் AS.No.37/1988 என்ற இரு வழக்குகளிலும் நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் குறையுற்ற என் முன்னோர்களான என் தாத்தா ஆறுமுகம், 1ம் வாதி சீதாராமனின் முன் விற்பனையாளர்களான பொன்னப்பன், ரத்தினம்மாள், செங்குட்டுவன் ஆகியோர்களும் இதுநாள் வரையில் மேற்படி தீர்ப்புகளுக்கு எதிராக தங்களுக்கு தடவழி பாதையில் நடந்து போவதற்கு மட்டும் உரிமை அளித்தது செல்லாது என்றோ, தடவழி பாதை பூரணமாக பாத்தியப்பட்டது என்றோ கோரி 2ம் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான்.

20) தற்போது என்னிடம் காட்டப்படும் சான்றாவணம் வா.சா.ஆ.14 மாதிரி வரைபடத்தில் ச.எண்.99/3ல் காட்டப்பட்டுள்ள நிலம் 5ம் பிரதிவாதியின் தந்தை சின்னபொண்ணுவின் பேரிலுள்ள பட்டா நிலம் என்றால், சரிதான். மேற்படி பட்டா நிலத்திலேயே சின்ன பொண்ணு நிலத்தின் தெற்கு பகுதியிலுள்ள என் பெயரிலும், என் சித்தப்பா பெயரிலும் உள்ள நிலத்திகு செல்லும் தடவழி ஒன்றையும், அதேபோல் ச.எண்.99/5ல் உள்ள சீதாராமன் நிலத்திற்கு செல்வதற்கு தென்வடலாக ஒரு வழித்தடத்தையும் காண்பித்துள்ளேன் என்றால், சரிதான்.

21) மேற்படி மாதிரி வரைபடத்தில் ச.எண்.99/3ல் மையப்பகுதியிலிருந்து மேற்படி இரண்டு வழித்தடங்களும் பிரிந்து செல்வதாக காண்பித்துள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் என் தாவா சொத்து விவரத்தில் மேற்படி இரண்டு தடவழிகளுக்குரிய அளவுகளோ, செக்குபந்தி விவரமோ நான் 5–வது அயிட்ட

சொத்தில் காண்பிக்கவில்லை என்றால், என் சொத்திற்கு மட்டும் தான் காண்பித்துள்ளேன். மேற்படி தடவழி எதுவும் காண்பிக்கவில்லை.

22) ஒரு பட்டா நிலத்தில் மையப்பகுதியில் 30 அடி அகலத்திலும், 500 அடி நிளத்திலும் தடவழி செல்வதாக நான் காண்பித்துள்ள நிலையில், மேற்படி பட்டாதாரர் இடையூறு இன்றி அவருடைய நிலத்தை அனுபவிக்க இயலாது என்றால், சரியல்ல.

23) இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் காண்பித்துள்ள மேற்படி தடவழிகளுக்கும், வழக்குரையில் நான் கூறியுள்ள 5-வது அயிட்ட சொத்திற்கும் முற்றிலும் முரண்பாடாக உள்ளது என்றால், சரியல்ல.

24) மேற்படி A.S.No.37/1988 என்ற மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்புரையிலும், ச.எண்.99/3 ல் உள்ள கிழபுற ஓரமாக தென்வடலாக மேற்படி தடவழி செல்வதாக குறிப்பிட்டுள்ள நிலையில் தற்போது என் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மேற்படி மாதிரி வரைபடத்தில் மேற்படி ச.எண்.99/3 ல் மையப்பகுதியிலிருந்து தடவழி செல்வதாக நான் காண்பித்துள்ளது பொய்யானது என்றாலும், அவ்வாறு நிலையில் ஒரு தடவழியே இல்லை என்றாலும், சரியல்ல.

25) அவ்வாறு உள்ள நிலையில், மேல்முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையில் வழங்கப்பட்டுள்ள பரிகாரத்தை தவிர வேறு எந்த பரிகாரமும் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால், சரியல்ல.

(1 முதல் 3, 5ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.